# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2049 ● ஜூன் 2, 2018 Weekly E-paper ● June 2, 2018


அகவை 94

# கலைஞர்

## நிழல் தரும் சூரியன்!

● மா.உதயகுமார்


அதிர்ச்சி தரும் நாள்களையே அண்மைக் காலத்தில் சந்தித்து வந்த நமக்கு முதிர்ச்சியோடு எழுச்சி தந்து ஊக்கமளிக்கும் நாள் ஒன்றும் வருகிறது. ஜூன் 3, தலைவர் கலைஞரின் பிறந்தநாள். அது ஒரு தனி மனிதனின் பிறந்தநாள் கொண்டாட்டம் அன்று. சமூக மறுமலர்ச்சிக்கு வித்திட்ட ஒரு பேரியக்கத்தின் கொள்கைகளின் பேரிகை. கொள்கைகளின்றி இன்று கட்டமைக்கப்படும் தமிழ்ச் சமூகத்திற்குக் காலத்தின் தேவையாக இந்நாள் அமைகிறது.

கலைஞரின் சிறப்புகளைக் கட்டுரைக்குள் கட்டிவிட முடியாது. ஆனால் அவரின் சிறப்புகளைச் சீர்தூக்கிப் பார்க்கும் போது தமிழர்களின் வாழ்வும் சீர் அடைந்திருப்பதை உணர முடிகிறது. அரசியல், பத்திரிக்கை, இலக்கியம், திரைப்படம், கவிதை, நாடகம், மேடைப் பேச்சு எனப் பல் துறை அறிஞராக விளங்கிய கலைஞர் அத்துறைகளில் முத்திரை பதித்தது மட்டும் கலைஞரின் பெருமை இல்லை. அத்தனை துறைகளிலும் சமூக நீதியையும், பகுத்தறிவையும், புதுமையையும் பரப்பி அத்துறைகளின் போக்கில் மாற்றம் ஏற்படுவதற்குப் பெரும் பங்களிப்பைச் செய்ததே கலைஞரின் பெருமையாகும். அத்தனை துறைகளிலும் கலைஞருக்கு முன், கலைஞருக்குப் பின் என்று பகுத்துப் பார்க்கும் அளவிற்கு ஆளுமை செலுத்தியதன்று அவருடைய சிறப்பு. அது மக்கள் விழிப்புணர்ச்சிக்கும், சமூக முன்னேற்றத்திற்கும் பயன்பட்டதே, அதுதான் கலைஞரின் சிறப்பு.

“பகுத்தறிவாளராகவும், ஆட்சிக்கலையில் அரிய ராஜதந்திரியாகவும், முன்னோசனையுடனும் அவர் நடந்து வருவதன் மூலம் தமிழர்களுக்குப் புதுவாழ்வு தருபவர் ஆகிறார் நமது கலைஞர்” என்று தந்தை பெரியார் கலைஞரைப் பாராட்டினார். அதன்படியே மிகச் சிறந்த ஆட்சியாளராக பல முற்போக்கு முன்னோடித் திட்டங்களைத் தமிழ் நாட்டிற்குத் தந்து வர்ணாசிரம அமைப்பால் பின் தங்கியிருந்த சமூகத்தை வளர்ச்சிப் பாதையில் கொண்டு சென்றார். இந்தியாவில் தமிழ்நாடு மற்ற மாநிலங்களைக் காட்டிலும் வளர்ச்சியில் முன்னிலையில் இருப்பதே இதற்குச் சான்று.

இத்தனையும் பெரியார், அண்ணா வகுத்துத் தந்த பாதை என்று சொல்லி அவர்கள் கொள்கைகளையே மக்களிடம் பரப்புரை செய்தார். தொண்டருக்குத் தொண்டராகக் கழகப் பணி ஆற்றினார். கலைஞர் வேறு கழகம் வேறு என்று பிரித்துப் பார்க்க முயன்றால் அம்முயற்சி தோலவியைத் தழுவும். அதனால் தான் தி.மு.கழகமும் வேரூன்றி நிற்கிறது. அரை நூற்றாண்டுக்கும் மேலாக அரசியலில் சூறாவளியாக சுழன்று வந்தவர் இப்போது தென்றலாக வீசுகிறார். அரசியலும் கலைஞரைச் சுற்றியே நகர்கிறது. இன்று கட்சி தொடங்குவோர் முதல் ஆட்சிக் கட்டிலில் இருப்போர் வரை கலைஞரைச் சுற்றியே காய்களை நகர்த்துகிறார்கள். அகவை 94 ஆன போதிலும் அரசியலில் கலைஞரே கதாநாயகராக இருக்கிறார்.

தன்னை “மானமுள்ள சுயமரியாதைக்காரன்” என்று ஒற்றை வரியில் வெளிப்படுத்தினார். இந்த வார்த்தைகளை



இன்றைய தமிழகச் சூழலில் கேட்கும் போது, தமிழ்நாடு எப்படிப்பட்ட ஆட்சியாளரைக் கொண்டிருக்கிறது என்பது விளங்குகிறது.

தமிழ்நாட்டை இருள் மட்டும் சூழவில்லை, வெம்மையும் வாட்டியெடுக்கிறது. நிழலின் அருமை வெயிலில் இப்போது மக்களுக்கும் தெரிகிறது சில மக்கள் தலைவர்களுக்கும் தெரிகிறது. உதயசூரியனாய் ஒளிக்கீற்றை வீசும் கலைஞர், பழுத்த மரமாய் குளிர்ச்சியூட்டும் நிழலையும் தருபவர். இந்த மரத்தினடியில் இன்று (ஜூன் 1, 2018) திருவாரூரில் மாபெரும் கூட்டம் கூடுகிறது. இது தமிழர்கள் கொண்டாட வேண்டிய திருநாள், தமிழர் உரிமைகளை மீட்டெடுக்கும் பெருநாள்! ●

# “அவ்வண்ணமே கோரும்...” ரஜினிகாந்த்!

சுப.வீரபாண்டியன்

## ரஜினிகாந்தின் நேர்காணலில்

- கலெக்டர் அலுவலகம், ஸ்டெர்லைட் குடியிருப்புகளைத் தாக்கியதில் விஷக்கிருமிகள் ஊடுருவியுள்ளனர். வன்முறையில் ஈடுபட்டவர்கள் மக்கள் கிடையாது, சமூக விரோதிகள், சில தீய சக்திகள்தான். இதுபோன்ற செயல்களில் ஈடுபடும் சமூக விரோதிகளைத் தமிழக அரசு இரும்புக் கரம் கொண்டு ஒடுக்க வேண்டும்.
- மக்கள் எதற்கு எடுத்தாலும் போராட்டம் நடத்தினால் தமிழ்நாடு சுடுகாடாக மாறிவிடும்.

**ரஜினி:** தூத்துக்குடிப் போராட்டத்திலும் சமூக விரோதிகள் புகுந்து கெடுத்தார்கள். அங்கு போராட்டம் நடத்தியவர்கள் மீனவர்கள் அப்பாவி பொதுமக்கள். சமூக விரோதிகள் தான் அதில் புகுந்து வன்முறையில் ஈடுபட்டார்கள். போலிசாரைத் தாக்கியதும், கலெட்டர் அலுவலகத்தை தாக்கியதும் அவர்கள்தான். தீ வைத்ததும் அவர்கள் தான்.

**நிருபர்:** இதெல்லாம் உங்களுக்கு எப்படித் தெரியும்?

**ரஜினி:** எப்படி தெரியும் என நீங்கள் கேட்க வேண்டாம் எல்லாம் எனக்குத் தெரியும்.



விஷக்கிருமி என்ற சொல் 50 ஆண்டுகளுக்கு முன் தமிழ்நாட்டில் பாவலாகப் பேசப்பட்ட ஒரு சொல். 1967 ஆம் ஆண்டு திமுக பதவிக்கு வந்ததும், முன்னாள் முதலமைச்சர் பக்தவத்சலம், "தமிழ்நாட்டில் விஷக்கிருமிகள் பரவி விட்டன" என்றார். அது குறித்த கடுமையான விமர்சனங்கள் பல அன்று வெளிவந்தன.

பிறகு பலரும் அந்தச் சொல்லை அல்லது அப்பொருள்படும் சொல்லை அடிக்கடி கையாண்டனர். அண்மையில் சல்லிக்கட்டுப் போராட்டத்திலும், இப்போது தூத்துக்குடியிலும் அந்தச் சொல் பயன்படுத்தப் பட்டது. இப்போது மீண்டும் தூத்துக்குடிப் போராட்டத்தில் விஷமிகள் பரவி விட்டனர் என்று மத்திய அமைச்சர் பொன். ராதாகிருஷ்ணன், தமிழக முதலமைச்சர் எடப்பாடி ஆகியோர் கூறினர். இப்போது அதே சொல்லையும், கருத்தையும் ஊடக நேர்காணலில் ரஜினி பயன்படுத்தியுள்ளார்,


கொதித்துக் கொந்தளித்து எழுந்த மக்களின் போராட்டத்தை விஷமிகள் நடத்திய போராட்டம் என்று சொல்வது மக்களைக் கொச்சைப்படுத்துவதாகாதா? 99 நாள்கள் அமைதியாக மக்கள் நடத்திய போராட்டத்தை அரசு கண்டு கொள்ளவே இல்லை என்கிறபோது, மக்களிடம் ஒரு கோபம் குடிகொள்ளாதா? அந்தக் கோபம் சற்றுச் சூடேறி வன்முறையில் போய் முடிந்திருக்கிறது. அந்த வன்முறையைப் பற்றி மட்டும் கவலைப்படும் புதிய தேசபக்தர் ரஜினி, அந்த வன்முறையைத் தூண்டிய வன்முறை பற்றி அறிவாரா? மக்களின் உடல்நலம், உயிர்ப்பாதுகாப்பு என எது குறித்தும் கவலை கொள்ளாமல், தனியார் ஆலைக்கு அரசுகள் அளித்த ஆதரவுக்கு என்ன பெயர்? அது வன்முறையில்லையா?




தன் திரைப்படங்களில் 'வேங்கை மகன் ஒத்தையில நின்னு' எத்தனை வன்முறைகளை அரங்கேற்றியிருக்கிறார்! அதுதான் வீரம் என்று எத்தனை படங்களில் சொல்லாமல் சொல்லியிருக்கிறார். அவையெல்லாம் வன்முறைக்கான தூண்டுதல்தானே! ஆனால் அவற்றையெல்லாம் நினைப்பில் வைத்தன்று, தங்கள் வாழ்வுக்காக, உயிருக்காகப் போராடிய மக்களிடையே விஷக்கிருமிகளை புகுந்துவிட்டனர் என்பதற்கு என்ன ஆதாரம்? அரசு சொல்வதை அப்படியே திரும்பிச் சொல்வதற்கு ஒருவர் தூத்துக்குடி வரை பயணம் செய்ய வேண்டியதில்லை.எடப்பாடியின் அறிக்கைக்கும், பொன். ராதாகிருஷ்ணன் நேர்காணலுக்கும் கீழே, "அவ்வண்ணமே கோரும்" என்று எழுதிக் கையெழுத்துப் போட்டிருக்கலாம் ரஜினி!

ஆலையை மீண்டும் திறக்க நீதிமன்றம் சென்றால், இனி அவர்கள் மனுஷங்களே இல்லை என்று கூறும் ரஜினிகாந்த்தான், எதுவாக இருந்தாலும் கோர்ட்டுக்குத்தான் போகணும் என்கிறார். என்ன முரண் இது! விஷமிகள் நடத்திய வன்முறை எதிர்ப்புப் போராட்டம்தானே, அதற்காக நாங்கள் ஏன் எங்கள் ஆலையை மூட வேண்டும் என்று அவர்கள் நீதிமன்றம் சென்று கேட்கமாட்டார்களா? மக்கள் போராட்டத்தை விஷமிகள் நடத்திய போராட்டம் என்று திரித்துச் சொல்வதை விட, ஆலை முதலாளிகளுக்கு வேறு எப்படி உதவ முடியும்?

கூட்டத்தை நோக்கிக் கூட இல்லை, குறிபார்த்துச் சுட்டிருக்கின்றனர் காவல்துறையினர். இனிவரும் காலங்களில் எவரும் போராட்டத்தை முன்னெடுக்கக்கூடாது என்னும் ஆகப் பெரிய மிரட்டல்தானே




நன்றி (படம்): **விகடன்**

இது! அதனைக் கண்டித்து விட்டல்லவா காவல்துறையினரைத் தாக்கியவர்களைக் கண்டித்திருக்க வேண்டும்?

ஒரு நபர் ஆணையம் மீது நம்பிக்கையில்லை, உளவுத்துறையின் பிழைதான் இது என்று ஒப்புக்குச் சொல்லிவிட்டு, ஒட்டுமொத்தமாய் மக்கள் போராட்டத்தை விஷமிகளின் வன்முறைப் போராட்டம் என்று சொல்லிவிட்டார் ரஜினிகாந்த்!

ஜெயலலிதாவின் இரும்புக்கரத்தைப் பாராட்டும் இவர் போன்றவர்கள் ஆட்சிக்கு வந்தால், நாட்டில் இரும்புக்கரங்கள் மட்டும்தான் மிஞ்சும். மக்கள் மிஞ்ச மாட்டார்கள்! கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை போதாது என்பது போலல்லவா உள்ளது அவருடைய நேர்காணல்!

பூனைக்குட்டி வெளியில் வந்தது ஒருவிதத்தில் நல்லதுதான். ரஜினியின் அரசியல் பயணம் தொடங்குவதற்கு முன்பே தோல்வியடைந்துள்ளது! ●

ஆசிரியர்
**சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்
**எழில். இளங்கோவன்**

ஆசிரியர் குழு
**தமிழ்மறவன்**
**உ.தயகுமார்**
**வெற்றிச்செல்வன்**

வெளியிடுபவர்
**கோ.தினகரன்**

இணையதளம்
**www.keetru.com**
**www.peravai.com**
**www.peravainoolagam.com**

மின் அஞ்சல்
**karunchattai@gmail.com**

டுவிட்டர்
**suba_vee**

தொடர்புக்கு
**122/130 என்.டி. ராமராவ் தெரு**
**ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்**
**சென்னை - 600 024**

**தொலைபேசி: 044-4204 7162**




## திராவிடத் தமிழர் கட்சி–தொடக்கம்

**‘ஆ**ரியத்தால் வீழ்ந்தோம்! திராவிடத்தால் எழுவோம்!’ என்ற முழக்கத்தை முன்வைத்துத் திராவிடத் தமிழர் கட்சித் தொடக்க விழா மே திங்கள் 27ஆம் நாள் மதுரையில் நடைபெற்றது. கடந்த 98 ஆண்டு கால அருந்ததியர் சமூக மக்களிடையே இருந்து ‘திராவிடம்’ என்ற பெயரோடு தோன்றும் முதல் கட்சி இதுதான் என்பது குறிப்பிடத்தக்கது. அருந்ததியர் மக்களிடையே திராவிடர் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி, ஆரியத்திற்கு எதிரான சமூகக் களத்தில் மக்களை ஒன்றிணைத்துக் கொண்டு சொல்லும் அரசியல் பணியில் இந்தக் கட்சியை வழக்கறிஞர் வெண்மணி தொடங்கியுள்ளார். இதன் தொடக்க விழாவில் தோழர் வெண்மணி தலைமையில், தோழர் முத்துராக்கு வரவேற்புரை ஆற்றினார். தந்தை பெரியார் திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் தோழர் கு.ராமகிருட்டிணன், எழுத்தாளர் வே.மதிமாறன், திராவிட இயக்கத் தமிழர் பேரவைப் பொருளாளர் எழில்.இளங்கோவன், களப்பிரர், வழக்கறிஞர் இளமதி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.



## இதுதான் ராமராஜ்யம்–கருத்தரங்கம்

**‘இ**துதான் ராமராஜ்யம்’ நூல் அறிமுகக் கருத்தரங்கம் திண்டுக்கல்லில் 25.5.2018 அன்று நடைபெற்றது. இக்கருத்தரங்கிற்குத் தோழர் வெ.நடராசன் தலைமை தாங்கினார். தோழர் அரசெழில் வரவேற்புரை ஆற்றினார்.

தோழர்கள் இராணி, சுதந்திரதேவி, புலவர் வீரகலாநிதி, துரைசம்பத், புலேந்திரன் ஆகியோர் கருத்துரையாற்றினார்கள்.

நிறைவாகத் தோழர் சுப.வீரபாண்டியன் எழுதிய இதுதான் ராமராஜ்யம் நூல் குறித்துத் திராவிட இயக்கத் தமிழர் பேரவைக் கொள்கைப் பரப்புச் செயலாளர் தோழர் ரவிச்சந்திரன் சிறப்பான திறனாய்வுரை ஆற்றினார்.

*தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!*

# கருஞ்சட்டைத் தமிழர்

## காவிரி: மோடி, எடப்பாடி துரோகம்

**தூ**த்துக்குடி மக்களின் உரிமைப் போராட்டம், 13 பேர்கள் சுட்டுக்கொலை, அமைதியற்ற சூழலில் மக்கள்.

இந்நிலையில் கையாலாகாத எடப்பாடியும், அவரின் அரசும் காவிரிப் பிரச்சனையைக் கைகழுவிக் கொண்டிருக்கிறது.

காவிரி மேலாண்மை வாரியம் ‘ஆணையம்’ ஆகி, அதை 9 பேர் கொண்ட குழு செயல்படுத்தும் என்று மத்திய மோடி அரசு உச்சநீதி மன்றத்தில் கூறியது.

அந்த ஆணையத்தை ஜூன் முதலாம் தேதியான தென் மேற்குப் பருவக் காலத்திற்கு முன்பு அமைத்து, அரசிதழில் வெளியிட்டுத் திட்டத்தை நடைமுறை படுத்த வேண்டும் என உச்சநீதி மன்றம் ஆணையிட்டது.

ஆனால் இதுவரையும் ஆணையம் அமைக்கப்படவில்லை. இதுகுறித்து மத்திய நீர்வளத்துறைச் செயலாளர் யு.பி.சிங் ‘‘பிரதமர் வெளிநாட்டுப் பயணம் சென்றுள்ளதால் ஆணையம் அமைப்பது பற்றி இப்பொழுது எதுவும் சொல்ல முடியாது’’ என்று கூறியிருக்கிறார்.

மோடிக்கு இந்தியாவில் வேலையே இல்லை. எப்போதும் வெளிநாடுகளில் சுற்றிக் கொண்டிருக்கும் சுற்றுலாப் பயணி அவர். இந்த ஒரு மனிதரின் ஊர் சுற்றும் செயலுக்காக ஒரு மாநில மக்கள் தங்கள் வாழ்வாதாரத்தை இழப்பது என்பது என்ன நியாயம்?

இப்படிப்பட்ட சூழலில் தென்மேற்குப் பருவ மழை தொடங்கவிருக்கிறது. அப்படித் தொடங்கிவிட்டால் கேரளா, கர்நாடக நீர் பிடிப்புப் பகுதிகளில் பெய்யும் மழையால் கர்நாடக அணைகள் நிரம்பிவிடும்.

அதற்குள் காவிரி ஆணையம் அமைத்தால், அதன் மூலம் தமிழகத்திற்குத் தண்ணீர் கேட்கலாம். கர்நாடகம் முழுமையாகத் தர மறுத்தாலும் இல்லை என்று சொல்ல முடியாமல் ஓரளவாவது கொடுக்க வேண்டிய நிலை அதற்கு ஏற்படும்.

இதுவரை ஆணையம் அமையவில்லை என்பதனால் இந்தப் பருவ மழையின் பயனாக நிரம்பப் போகும் நீர் முழுவதையும் கர்நாடகம் மட்டுமே பயன்படுத்திக் கொள்ளும்.

தமிழக டெல்டா பகுதி முழுவதும் மேலும் வறண்டு போகும் அபாயம் கண்முன் வந்து நிற்கிறது.

இப்படி ஒரு நிலை ஏற்பட்டுத் தமிழர்கள் ‘சோமாலிய’ மக்களின் நிலைபோல் ஆக வேண்டும் என்பதுதான் மோடி அரசின் திட்டமா? அதனால்தான் ஆணையம் அமைக்க முயற்சி செய்ய முடியவில்லையா?

இந்த ஆண்டு குறுவை சாகுபடிக்குக் காவிரியில் இருந்து தண்ணீர் திறந்துவிட வில்லை என்றால், கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு சாகுபடி பெரும் பாதிப்பை ஏற்படுத்திவிடும்.

ஆணையம் அமைக்காத காரணத்தினால் உரிய நீர், உரிய நேரத்தில் சாகுபடிக்காக விவசாயிகளின் நிலங்களுக்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கை இதுவரை ஏற்படவில்லை.

இவையெல்லாம் முதல்வர் எடப்பாடிக்கும், அவரின் அரசுக்கும் தெரியாதா?

பொதுப் பணித்துறை பொறுப்பு வகிக்கும் எடப்பாடி, காவிரி மேலாண்மை ஆணையம் குறித்து இதுவரை வாய் திறக்கவே இல்லை.

அதற்கான காலக்கெடு 31 மே மாதத்துடன் முடிந்தும், வாயை முடிக்கொண்டிருக்கிறார் முதல்வர்.

மத்திய மோடி அரசுக்குத் துணையாக தமிழக எடப்பாடி அரசு துணைபோவது தமிழகத்திற்கும், தமிழர்களுக்கும் செய்யும் மாபெரும் துரோகம்.

மக்கள் இவர்களை மன்னிக்க மாட்டார்கள்!

விரைவில் தூக்கி எறிவார்கள்!

# அரசாணை தீர்வன்று...

வெற்றிச்செல்வன்

ஸ்டெர்லைட் ஆலையை மூடுவதாக ஒரு திடீர் அரசாணையைப் பிறப்பித்து, ஆலைக்குச் சீல் வைக்கும் நாடகத்தைத் தமிழக அரசு தற்போது அரங்கேற்றியுள்ளது.

இதுதொடர்பான தமிழக அரசின் அரசாணையில், "இந்திய அரசியலமைப்புச் சட்டம் 48ஏ பிரிவின்படி காடுகள், வன உயிரினங்களைக் காக்கச் சுற்றுச்சூழலைப் பாதுகாத்து, மேம்படுத்த வேண்டியது மாநில அரசுகளின் கடமையாகும். 1974 ஆம் ஆண்டு தண்ணீர் சட்டத்தின்படி தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம், ஸ்டெர்லைட் தாமிர உருக்காலைக்குச் சீல் வைத்து நிரந்தரமாக மூட வேண்டும்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், "1974 ஆம் ஆண்டின் நீர்ப் பாதுகாப்புச் சட்டத்தின் 18 1–பி பிரிவின்படி தமிழக மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் மூடல் உத்தரவை அரசு ஏற்பதாகவும் அதனை மூடிச் சீல்வைக்க மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்திற்கு உத்தரவிடுவதாகவும்", அந்த அரசாணையில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

ஆலை மூடப்பட வேண்டும் என்பதில் எந்தவித மாற்றுக்கருத்தும் இல்லை. ஆனால், ஸ்டெர்லைட் ஆலையின் விதிமுறை மீறல்கள், சுற்றுச்சூழல் பாதிப்புகள், மக்களுக்கு ஏற்பட்ட உடல் நல சீர்கேடு ஆகியவற்றைக் குறிப்பிடாமல் அரசாணை பிறப்பித்திருப்பது பெருத்த சந்தேகங்களை ஏற்படுத்துகிறது.

ஆலையிலிருந்து வெளிவரும் ஃப்ளூரைடு, சல்ஃபைடு ஆகிய வேதிக்கழிவுகள் மேலாண்மை விதிப்படியும் இந்த ஆலைக்கு உரிமம் வழங்கப்படவில்லை. அதுமட்டுமின்றி, உரிய உரிமம் இல்லாமலேயே உற்பத்தித் திறன் ஒவ்வொரு முறையும் உயர்த்தப்பட்டிருக்கிறது. அந்த உற்பத்தித் திறனுக்கு ஏற்ப புகை போக்கியின் உயரமும் அமைக்கப்படவில்லை என நிரூபணமாகியிருக்கிறது.

Red Category பிரிவில் உள்ள இந்த ஸ்டெர்லைட் ஆலை, உயிரியல் முக்கியத்துவம் வாய்ந்த மன்னார் வளைகுடாப் பகுதியிலிருந்து 25 கி.மீ. தூரத்திற்குள் அமைக்கப்படக்கூடாது என்பது முக்கிய நிபந்தனை. ஆனால் மன்னார் வளைகுடாப் பகுதியிலிருந்து 15 கி.மீ. தூரத்திற்குள் அமைக்கப்பட்டிருப்பது இந்த ஆலையின் மீதான மிக முக்கியமான குற்றச்சாட்டு. இரண்டாவதாக, தொழிற்சாலையைச் சுற்றிலும் 250 மீ அளவுக்கு மரம் வளர்த்து பசுமை அரணை (க்ரீன் பெல்ட்) அமைக்க வேண்டும். அதனையும், ஸ்டெர்லைட் நிர்வாகம் மேற்கொள்ளவில்லை என்றும் குற்றச்சாட்டு உள்ளது. இப்படிப் பல முக்கிய விதிமுறை மீறல்களைக் குறிப்பிடாமல் தமிழக அரசு மூடல் அரசாணையை பிறப்பித்துள்ளது.

சட்ட மன்றம் கூடவிருக்கிறது. கொல்லப்பட்டவர்களின் உடல்களை மறு கூராய்வு செய்வது தொடர்பான மனு உயர்நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ளது. இவற்றையெல்லாம் கணக்கில் கொண்டுதான் இந்த "சீல் வைக்கும் நாடகம்" அரங்கேற்றப்பட்டுள்ளது.



ஆலையை நிரந்தரமாக மூடுவதாக மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் மூலம் தமிழக அரசு பிறப்பித்துள்ள அரசாணை என்பது மக்களை ஏமாற்றும் மோசடி."சூழலை மாசுபடுத்தியதற்காக ஆலையை மூடவேண்டும்" என்று 2010 ஆம் ஆண்டு சென்னை உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்பை, 2013 இல் உச்ச நீதிமன்றம் சென்று ஸ்டெர்லைட் முறியடித்தது. 2013 இல் நச்சுப்புகை வெளியானதையொட்டி, (இப்போது சீல் வைப்பதைப் போலவே) அன்றைக்கும் அ.தி.மு.க. அரசு சீல் வைத்தது. ஆனால் பசுமைத் தீர்ப்பாயத்தில் உத்தரவு பெற்று ஆலையை மீண்டும் திறந்தது ஸ்டெர்லைட் நிர்வாகம். அந்த வழக்கு 5 ஆண்டுகளாக இன்னமும் நடந்து கொண்டிருக்கிறது.

எனவே இந்த சீல்வைப்பு என்பது ஒரு கபட நாடகம். உண்மையிலேயே நிரந்தரமாக இந்த ஆலையை மூடவேண்டுமானால், "தாமிர உருக்காலைகளுக்குத் தமிழகத்தில் இடமில்லை" என்று தமிழக அரசால் கொள்கை முடிவு எடுக்கப்பட வேண்டும். இந்தச் சட்டமன்றக் கூட்டத்திலேயே, சல்லிக்கட்டுக்குச் சட்டம் இயற்றியதைப் போல இதற்கும் தனிச் சட்டம் இயற்றப்படவேண்டும். இவ்வாறு செய்வதுதான் இதற்குச் சட்ட ரீதியான தீர்வு என்று சூழலியல் ஆர்வலர்களும், சட்ட வல்லுநர்களும் கூறுகின்றனர். இவ்வாறுதான் மகாராட்டிரத்திலிருந்து ஸ்டெர்லைட் விரட்டப்பட்டது.

தற்போது இந்த அடிமை அரசு இந்த அறிவிப்பைச் செய்வதற்குக் காரணம், பத்து லட்சம், இருபது லட்சம் நிவாரணத்துக்கு தூத்துக்குடி மக்கள் யாரும் மயங்கவில்லை. துப்பாக்கிச் சூட்டால், காயமடைந்து மருத்துவமனையில் கிடக்கும் மக்கள், "என்றைக்கு ஆலையை மூடுவீர்கள்" என்ற ஒரே கேள்வியை மட்டுமே எழுப்புகின்றனர். "ஸ்டெர்லைட்டை மூடினால்தான் இறந்தவர்களின் உடலை வாங்குவோம்" என்கின்றனர். எனவே, மக்களை ஏமாற்றி இப்போதைக்கு இப்பிரச்சினையை முடிப்பதற்காகவே இந்த மோசடி அறிவிப்பு செய்யப்பட்டிருக்கிறது.

ஸ்டெர்லைட்டைப் பொறுத்தவரை அனுமதி மறுக்கப்பட்ட பின்னர் தொடர்ந்து நடத்தப்பட்டதாகக் கூறி அரசு இன்று ஸ்டெர்லைட்டை பூட்டி முத்திரையிடவில்லை. மாறாக நீர் மாசுக் கட்டுப்பாடு சட்டப் பிரிவு 18(1)(b) சுட்டிக்காட்டப்படுகிறது. ஸ்டெர்லைட்டை பூட்டி முத்திரையிட, அதுவும் நிரந்தரமாக மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தை அரசு இந்த உத்தரவின் மூலம் கேட்டுக் கொண்டுள்ளது.

பிரிவு 18(1)(b) கீழ் மாநில அரசு மாசுக் கட்டுப்பாடு வாரியத்திற்கு உத்தரவுகள் பிறப்பிக்கலாம். ஆனால் இன்று கூறப்பட்டுள்ள உத்தரவுக்கான காரணம் 'பொதுநலன்' என்ற ஒற்றை வார்த்தையைத் தவிர வேறு இல்லை.

நாளை ஒருவேளை ஸ்டெர்லைட் நிறுவனம் மாசுக் கட்டுப்பாட்டு வாரியம், அனுமதி நீட்டிக்க மறுத்த காரணத்தைச் சரி செய்தாலோ அல்லது மாசுக் கட்டுப்பாட்டு வாரிய உத்தரவுக்கு எதிராகப் பசுமைத் தீர்ப்பாயம் அல்லது உச்ச நீதிமன்ற உத்தரவைப் பெற்று வந்தாலோ, தமிழக அரசு உத்தரவு என்னவாகும்?

பொதுமக்கள் எதிர்க்கிறார்கள் என்ற ஒரே காரணத்தை வைத்து, சட்டத்திற்கு உட்பட்டு ஒரு தொழிற்சாலை இயங்குவதை மாநில அரசு தடுக்க முடியுமா, என்ற கேள்வி எழுந்தால், அதற்கு இல்லை என்பதுதான் பதிலாக இருக்க முடியும். அதற்குச் சாராயம் காய்ச்சுவது எப்படி சட்டரீதியில் தடை செய்யப்படுகிறதோ அது போல காப்பர் ஸ்மெல்டரிங் தொழிற்சாலை இயக்குவதைத் தடை செய்யக் கொள்கை ரீதியிலான முடிவு எடுக்கப்பட்டுத் தொடர்ந்து சட்ட அங்கீகாரமும் வழங்கப்பட வேண்டும். அப்படியான எந்த முடிவும் இன்று எடுக்கப்படவில்லை.

அவ்வாறு இல்லாமல் மாசு கட்டுப்பாடு வாரிய அனுமதியையும் தாண்டி 'அரசு நிரந்தரமாக ஒரு ஆலையைப் பிரிவு 18(1)(b)ஐ பயன்படுத்தி மூட வேண்டுமென்றால் அதற்கான தகுந்த காரணங்கள் இருக்க வேண்டும். அந்தக் காரணங்கள் முறையாக ஆராயப்பட்டு அவை அந்த உத்தரவில் தெளிவுப்படுத்தப்பட வேண்டும்.

எனவே தமிழக அரசு கொள்கை முடிவாக, தமிழகத்தில் இனி காப்பர் ஆலையை இயக்க அனுமதிக்க மாட்டோம் என முடிவு செய்து அதைச் சட்டமாக இயற்றுவதே இப்பிரச்சனைக்கு நிரந்தரமான தீர்வாக இருக்க முடியும். ●

Publisher G.Dinakaran. Editor Suba. Veerapandian, General Secratary, Dravida Iyyakka Tamilar Peravai.